# பட்டயம்

மலர் – 07 மார்ச் – 2011 இதழ்–5

Date of Issue : 01-03-2011
Place of Publication : 86 / 222H, Main Road, Panagudi - 627 109. Tirunelveli District, Tamil Nadu.
Volume : 7
Issue : 5 Price Per Copy : Rs.5.00



'சமுத்திரத்தில் உள்ள வலுசர்ப்பத்தைக் கொன்று போடும் கர்த்தாவே!'
(ஏசாயா 27/1) (வெளி 13/1)

'SLAY THE DRAGON IN THE SEA' - (ISAIAH 27/1)

ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

## 284. கர்த்தரை உயர்த்துதல் என்றால் என்ன?

ஒரு மனிதனுக்கு தலை முக்கியம். நம் தலைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அதைவிட சபையின் தலையாகிய இயேசுவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தலையாகிய இயேசுவை உயர்த்த வேண்டும்; இயேசுவை மகிமைப்படுத்த வேண்டும். இதுவே நம் வாழ்வின் நோக்கமாக, தாகமாக இருக்க வேண்டும்.

உங்களுக்கு ஆண்டவர் என்ன கிருபைகளைக் கொடுத்திருக்கிறாரோ அதைக் கொண்டு தேவனை மகிமைப்படுத்த வேண்டும். (யோ.17/4); எல்லாருக்கும் எல்லா கிருபைகளும் இருக்காது. ஒரு கிருபையும் உங்களுக்கு இல்லையென்றால் ஆண்டவரிடம் கிருபைகளைக் கேளுங்கள். ''ஆண்டவரே உம்மை மகிமைப் படுத்துவதற்கேதுவான கிருபைகளை எனக்குத் தாரும்'' என ஜெபிக்க வேண்டும். பரிசுத்த ஆவியைப் பெற்று, கிருபைகளைக் கேளுங்கள். நன்மையான ஈவைக் கேட்டால் தராமல் இருக்க மாட்டார். தகப்பனிடம் மீன் கேட்டால் தேளைக் கொடுக்க மாட்டார். முட்டையைக் கேட்டால் கல்லைக் கொடுக்க மாட்டார். அதைவிட பரமபிதா அன்புள்ளவர். நீங்கள் எதை விரும்பிக் கேட்கிறீர்களோ அதை அவர் தருவார். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல என ரோமர் 8/9 ல் வாசிக்கிறோம். கிறிஸ்துவின் ஆவியைப் பெற்று அவருடையவர்களாக மாறுங்கள். இந்த பரிசுத்தாவியை பெறாமல், விசேஷித்த கிருபைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது.

தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தது. தேவனை மகிமைப்படுத்த இந்த விசேஷித்த ஆவியாகிய பரிசுத்த ஆவியைப் பெற வேண்டும்.

## 285. தேவனை மகிமைப்படுத்த வேண்டுமானால் நம் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும்?

சங் 133/2ல் நல்ல தைலம் என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கும். பரிமள தைலம் ஊற்றப்பட்டது, இயேசுவின் தலையின் மேல். அது வாசனை வீசியது. அது போல நாமும் பரிமள தைலமாகிய பரிசுத்த ஆவியைப் பெற்று தேவனை மகிமைப்படுத்த வேண்டும். நம் சாமர்த்தியத்தினால், ஞானத்தால், அறிவால் தேவனை மகிமைப்படுத்த முடியாது. அவருடைய ஆவியை நமக்குள் நிறைவாய் பெற வேண்டும். ''நளதம்'' என்னும் உத்தம தைலம் பரிசுத்தாவிக்கு ஒப்புமையாக இருக்கிறது. வெள்ளைக்கல் பரணியிலே உத்தம தைலம் வைக்கப்பட்டிருந்தது. வெள்ளைக்கல் பரணியாக நாம் மாற வேண்டும்.

பரிசுத்தமாக நாம் மாற வேண்டும். நளதம் என்னும் உத்தம தைலம் பரிசுத்தமான வெள்ளைக்கல் பரணியில் ஊற்றப்பட வேண்டும்.

வெள்ளைக்கல் பரணி என்பது நம் சரீரத்தைக் குறிக்கிறது. நம் சரீரம் பரிசுத்தமாக மாற வேண்டும். பரிசுத்தம் மேல் பரிசுத்தமாக மாற வேண்டும். பரிசுத்த ஆவியைப் பெற பரிசுத்த வாழ்க்கைக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். “ஆண்டவரே என்னைப் பரிசுத்தப்படுத்தும்” என ஜெபிக்க வேண்டும். வெளி 22/11ல் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். நாளுக்கு நாள் நம் எண்ணங்கள் சுத்தமாக வேண்டும். நம் இதயத்தின் தியானங்கள் சுத்தமாக வேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.

**286. பரிசுத்த ஆவியைப் பெற முதலாவது செய்ய வேண்டியது என்ன?**

பரிசுத்த ஆவியைப் பெற விரும்புபவர்கள் முதலாவது வெள்ளைக்கல் பரணியைப் பெற வேண்டும். பால் வாங்குவதற்கு முன்பாக பாத்திரத்தைக் கழுவ வேண்டும். அது போல பரிசுத்த ஆவியாகிய எண்ணெயைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக வெள்ளைக்கல் பரணியாக மாற வேண்டும். கர்த்தர் நம்மை கழுவாவிட்டால், நாம் பரிசுத்தத்தைப் பெற முடியாது. நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்கு பங்கில்லை என யோ 13/8 கூறுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். (Iயோ 1/7). ஞானஸ்நானம், இராப்போஜனம் மூலம் கழுவப்படுங்கள்.

**287. பரிமளதைலம் எதைக் குறிக்கும்?**

பரிமளதைலம் என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவியைக் கொண்டு தேவனை மகிமைப்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியைப் பெறாமல் கிருபைகளைப் பெற முடியாது. கிருபைகளைப் பெறாமல் தேவனை மகிமைப்படுத்த முடியாது. பரிமள தைலம் என்பது நளதம் என்னும் உத்தம தைலம். அது போல பரிசுத்த ஆவி பரிசுத்தமானது. புது ரசத்தை புது துருத்தியில் பெற வேண்டும். புதுரசம் என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கும். புது துருத்தி என்பது வெள்ளைக்கல் பரணியைக் குறிக்கும். நம் ஆவி, ஆத்துமா, சரீரம் சுத்ததமாக்கப்பட ஆண்டவரின் கைகளில் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். அவரால், அவர் இரத்தத்தால் கழுவப்பட வேண்டும்.

**288. சாத்தான் எப்போது சபையை மேற்கொள்ள முடியாது?**

இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை (மத் 16/18). பரிசுத்த ஆவியைப் பெறும் போது நம்மை சாத்தான் மேற்கொள்ள முடியாது. பரிசுத்த ஆவி

பெறும் போது பெலனடைய முடியம். இன்னும் பரிசுத்தமாக முடியும்; ஆண்டவர் நாமத்தை இன்னும் மகிமைப்படுத்த முடியும். சாத்தான் மேல் ஜெயம் எடுக்க முடியும். பரிசுத்த ஆவியை பெற்று ஆவியின் வரங்களைப் பெற வேண்டும்.

**289. அவர் பாதஸ்தானத்தை எப்படி மகிமைப்படுத்த வேண்டும்?**

அவர் பாதத்தில் பரிமளதைலம் ஊற்றியது போல, அவர் ஆலயத்திலே விசேஷமான காரியங்களைச் செய்ய வேண்டும். ஆலயத்தைச் சுத்தமாக வைக்கவும் அலங்கரிக்கவும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்போது அவர் மகிமைப்படுவார். மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவரின் முன்னணையையும் அறியும். இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது. முன்னணையாகிய ஆலயத்தைக் குறித்த கரிசனை நமக்கு வர வேண்டும். முன்னணைக்கடுத்த காரியத்திலே நாம் பிரயாசப்பட வேண்டும்.

அவருடைய பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவது ஆண்டவருக்குப் பிரியம். அவர் பாதத்தில் ஒரு ஸ்தீரி கண்ணீரை ஊற்றித் துடைத்தாள். இன்னொரு ஸ்தீரி பரிமள தைலம் ஊற்றித் துடைத்தாள். இயேசுவின் பாதம் மகிமைப்படுத்தப்பட்டது. ஆண்டவருக்கடுத்த காரியங்களில் செலவு செய்யும் போது சத்துருக்கள் இந்த வீண் செலவு என்னத்திற்கு? என சொல்வார்கள். (மத் 26/8,9). இயேசு அதற்கு "இவள் என்னிடத்தில் நற்கிரியை செய்திருக்கிறாள்" என்றார். மரியாள் பரிமளதைலம் ஊற்றியவுடன் யூதாஸ், "இந்த தைலத்தை 300 பணத்திற்கு விற்று தரித்திரருக்கு கொடுக்காமல் போனதென்ன?" என்றான். அவர் பாதஸ்தானத்தை மகிமைப்படுத்துவது வீண் செலவு கிடையாது. வீண் செலவு எத்தனையோ நாம் செய்கிறோம். உடுக்க எத்தனை துணிகள் இருந்தாலும் இன்னும் வேண்டும் என அதிகமாக வாங்குகிறோம். நம் நேரத்தை வீணாய் செலவழிக்கிறோம். இதுவும் வீண் செலவாகும். ஆடம்பரம் செய்வது வீண் செலவு; பொருட்களை நஷ்டப்படுத்துவது வீண் செலவு. மற்ற எல்லா வீண் செலவுகளையும் தவிர்க்க வேண்டும். கர்த்தருக்கடுத்தவைகளை வீண் செலவு என சொல்லக் கூடாது.

**290. ஏன் வசனத்திற்குச் செவிகொடுக்க வேண்டும்?**

தேவன் சபையிலே பேசி எச்சரிக்கிறார். அவர்கள் கேட்கும்படி நான் யாரோடு பேசி எச்சரிப்பேன்? (எரே 6/10); அவர்கள் செவி விருத்தசேதனம் இல்லாமல் இருக்கிறது. விருத்தசேனமில்லாத செவி

உள்ளவர்களுக்கு கர்த்தரின் வசனம் நிந்தையாயிருக்கிறது. இவர்களுக்கு கர்த்தரின் வார்த்தைகள் மேல் விருப்பமிருக்காது. கர்த்தரின் வார்த்தைகளை பரியாசம் பண்ணுபவர்களுக்கும், நிந்திப்பவர்களுக்கும் பயங்கர ஆக்கினை வரும். அவர் நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களை அவர் தண்டிப்பார் (யாத் 20/27). வசனம் கேட்டும் கீழ்படியாவிட்டால் அதற்கு தண்டனை உண்டு. ஆண்டவருக்கு விரோதமாக பேசக் கூடாது. எதிர்த்து நிற்கக் கூடாது. நான் கர்த்தருடைய உக்கிரத்தால் நிறைந்திருக்கிறேன். அதை ஊற்றி விடுவேன் என தேவன் எரேமியா 4/11ல் எச்சரிக்கிறார்.

## 291. கர்த்தரின் வசனம் எப்படியெல்லாம் கிரியை செய்ய முடியும்?

நான் உன் வாயிலிட்ட வார்த்தையை அக்கினியும், இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன் என எரேமியா 5/16 கூறுகிறது. ஆண்டவர் தம் திருவாக்கை தம் ஊழியர்களின் வாயிலே வைக்கிறார்.

1) அந்த வார்த்தை அக்கினியாய் வரும்.

2) அது ஆண்டவருடைய ஜீவ வார்த்தை.

3) பட்டயம் போல வெட்டும். அவர் தம் வார்த்தைகளை அக்கினியாக மாற்றி சுட்டெரிக்க வேண்டியவைகளைச் சுட்டெரிப்பார்.

4) எபி 4/12ல் கர்த்தரின் வார்த்தை ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது என வாசிக்கிறோம்.

5) அவர் வார்த்தை நித்திய ஜீவனுள்ளது. கர்த்தரின் வசனத்தினால் ஜீவன் உண்டாகும். அதனால் மரணம் விழுங்கப்படும். 6)கர்த்தரின் வசனம் வல்லமையுள்ளது. கருக்கானது. அது வெட்டும்.

7) கர்த்தரின் வசனம் உருவக்குத்தும், நினைவுகளை வகையறுக்கும்; சம்மட்டி போல கிரியை செய்ய முடியும்.

8) கர்த்தரின் வசனத்திற்குள் அவர் சத்தம் இருக்கிறது. வசனத்தை நாம் வாயைத் திறந்து அறிக்கை பண்ணும்போது அது சத்தமாக மாறுகிறது (சங்29). அது பிளக்கும்.

9) மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். வசனம் நம்மைப் பிழைப்பூட்டும் (மத்.4/4)

10) இரவும் பகலும் அவர் வசனத்தில் தியானமாக இருக்கும் மனுஷன் பாக்கியவான். சங்.1 ன் படியான சகல பாக்கியங்களும் கிடைக்கும்.

11) வேதபுத்தகத்தை நாம் சுமக்கும் போது, அந்த வேத வசனங்கள் நம்மைச் சுமக்கும். அவர் வசனம் சகலத்தையும் தாங்குகிறது. (எபி1/3)

12) வசனம் வாசிக்க வாசிக்க நாம் தேற்றப்படுகிறோம். (ஏசா. 66/13)

13) வசனத்தால் ஆரோக்கியம் கிடைக்கும். (நீதி 4/22)

14) வசனத்தால் தேவ ஆலோசனை கிடைக்கும். (சங் 1)

15) வசனத்தால் சத்தியத்திலே நாம் வளர முடியும் (யோவான் 8/32)

16) வசனத்தால் விடுதலை உண்டாகும்.

17) தெய்வீக சந்தோஷம் உண்டாகும். வேதம் என் மன மகிழ்ச்சி (சங் 119/92)

## 292. ஏன் நாவடக்கம் தேவை?

ஒரு சிறிய வார்த்தையாயிருக்கும். ஆனால் அது ஒரு பெரிய காட்டைக் கூட கொளுத்தி விட கூடிய அளவு பிரச்சனையை உண்டு பண்ணி விடும். நாவைக் காக்க வேண்டும்; இல்லாவிட்டால் பல பிரச்சனைகள் உண்டாகும். எதை எங்கே பேச வேண்டுமோ அதைத் தான் பேச வேண்டும். ஒரு வார்த்தை பேசும் முன்பாக அதை பேசலாமா என இரண்டு தடவை யோசித்து பின்பு பேச வேண்டும். நாவும் நெருப்பு தான், அது அநீதி நிறைந்த உலகம். நம் அவயங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்துகிறது. நாவை நாம் தவறாகப் பயன்படுத்தும் போது அது நம் முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி விடும். ஆகவே நாவடக்கம் நமக்கு வேண்டும்.

நாவை அடக்கத் தெரியாதவன் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர முடியாது. அணுகுண்டு வெடித்தால் சத்தம் வராது. ஆனால் அது இருந்து எத்தனையோ வருடங்களாக வேலை செய்யும், அது போல சிலர் வாயை திறக்காமலே அணுகுண்டு போல செயல்படுவார்கள். நம் வார்த்தைகளால், கிரியைகளால் பிரச்சனைகள் வராதபடி கவனமாக இருக்க வேண்டும்.

யானை, சிங்கம் இவைகளைக் கூட மனுஷன் அடக்குகிறான். முயலை 2 காதுகளையும் பிடித்து தூக்கினால் அடங்கி விடும். எல்லாவற்றையும் மனிதன் அடக்குகிறான். ஆனால் தன் நாவையோ அடக்காதவனாக இருக்கிறான். நாவைக் கொண்டு சாபம் போடக் கூடாது. தேவன் உண்டு பண்ணின மனுஷனை சபிக்க உனக்கு அதிகாரமில்லை. நம் நாவு சபிக்கிறது, கிண்டல் பேசுகிறது, பொய் பேசுகிறது, தேவனுடைய திருவசனத்தையே பரியாசமும் செய்கிறது. எல்லாவற்றையும் தேவன் மன்னிப்பார். ஆனால் அவர் வார்த்தைகளையே பரியாசம் பண்ணினால் அவர் ஆக்கினை சீக்கிரமாய் வரும். (எரே 6/10,11). நாவினால் செய்கிற பாவங்களில் பெரிய பாவம் ஆண்டவர் வார்த்தையை பரியாசம் பண்ணுவதாகும்.

நாவினால் பாவம் செய்யாதபடிக்கு கடிவாளத்தால் அடக்கி வைக்க வேண்டும். சொல் தவறாத பூரணபுருஷர்களாக நாம் மாற வேண்டும் (யாக் 3/2). நாவடக்கம் இல்லாவிட்டால் நாம் தேவனின் பார்வையில் பூரணப்பட முடியாது.

## 293. நாவடக்கம் உள்ளவர்களுக்குத் தேவன் எவைகளைக் கொடுப்பார்?

1. இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்லும்படி கர்த்தராகிய ஆண்டவர் கல்விமானின் நாவைத் தருவார். தேவனே நம் நாவோடு கூட இருந்து பேசுவார். பிறருடைய பிரச்சனைகளில் அவர்களுக்கு ஆறுதலான, தேறுதலான வார்த்தை, ஏற்ற ஆலோசனை கூற கல்விமானின் நாவு நமக்குத் தேவை, தேவனே நம் ஞானமாக இருந்து ஞானமான வார்த்தைகளை நம் நாவிலே பேசுவார். (ஏசாயா 50/4)
2. ஞானத்தைப் போதிக்கும் வசனமாகிய வரத்தை நாவடக்கம் உள்ளவர்களுக்குத் தருவார். தேவனின் ஞானத்தைப் போதிக்கும் வசனங்களை நம் நாவிலே தருவார். (1 கொரி 12/8)
3. அறிவை உணர்த்தும் வசனம் தருவார் - எந்த வசனத்தைக் கொண்டு புத்தி சொல்ல வேண்டுமோ அந்த வசனத்தைத் தருவார். (1 கொரி 12/8)
4. தீர்க்கதரிசன வரம் தருவார் - இதற்கு முதலாவது நாவடக்கம் தேவை. நம் நாவில் அருவருப்பான வார்த்தைகள் வருமானால் கர்த்தர் நம் நாவை எடுத்து பயன்படுத்த முடியாது (1 கொரி 14/1)
5. நவமான பாஷைகள் தருவார் (மாற்கு 16/17)
6. ஆண்டவர் நம் நாவை எடுத்து பயன்படுத்தும் போது தேற்றுகிற வார்த்தைகள், ஆற்றுகிற வார்த்தைகள், சீர்படுத்தும் வார்த்தைகள், சாம்பலுக்கு பதிலாக சிங்காரத்தைக் கொடுக்கும் வார்த்தைகள் தருவார். ஆறுதலும், தேறுதலும், சமாதானமும் உண்டாகும். உங்கள் நாவினால் பிறருக்கு சந்தோஷம் கொடுப்பார். (ஏசாயா 61/1-3)

## 294. தேவ பிள்ளைகளுக்கு தேவனால் என்ன நன்மைகள் கிடைக்கும்?

ஆண்டவர் நமக்கு எத்தனையோ நன்மைகள் செய்கிறார். அவர் நம்மைத் தீமைக்குத் தப்புவிப்பதே ஒரு பெரிய அனுக்கிரகம். எத்தனையோ கொள்ளை நோய்களுக்கெல்லாம் நம்மைத் தப்புவிக்கிறார், எத்தனையோ ஆபத்து, விபத்துகளுக்கு, பொல்லாப்புகளுக்கு நம்மைத்

தப்புவிக்கிறார். எத்தனை தீமைகள் வந்தாலும், அத்தனையும் தேவன் முறிக்கிறார். இயேசு நம்மை ஏந்துகிறார், சுமக்கிறார், தாங்குகிறார், தப்புவிக்கிறார். இம்மானுவேலராக இயேசு நம்மோடு இருக்கிறார். நமக்கு இளைப்பாறுதலைத் தந்திருக்கிறார். தேவன் நம்மை எல்லா கடன்களுக்கும் விலக்கியிருக்கிறார். கடன் வாங்கினவன் என்றைக்கும் கடன் கொடுத்தவனுக்கு அடிமை.

ஆண்டவர் தந்தவைகளில் நிறைவாய் திருப்தியாய் இருந்து அதைக்கொண்டு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். நம் நிலமைக்குத் தக்கபடி தான் நாம் செலவழிக்க வேண்டும்; வாழ வேண்டும்.

**295. தேவனை ஆராதிக்கிற ஜனத்திற்கு கிடைக்கும் ஆசீர் வாதங்கள் எவைகள்?**

தேவனை ஆராதிக்கிற ஜனத்தை நிச்சயம் கர்த்தர் ஆசீர்வதிப்பார். ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள ஜாக்கிரதையாயிருங்கள். ஆராதனையை அசட்டை செய்யாதீர்கள். உங்கள் நேரம் நஷ்டபட்டால், வாழ்க்கை நஷ்டப்பட்டு விடும். உன் வாழ்க்கை நஷ்டமாகாமல் இருக்க வேண்டுமானால், முழு மனதோடு தேவனை ஆராதி. யார் முழு மனதோடு தேவனை ஆராதிக்கிறார்களோ, அவர்கள் வாழ்க்கை நஷ்டமாகாது; அது லாபமாகும். தினமும் கர்த்தரை முழு மனதோடு தேடி ஆராதிப்பவர்கள் வியாதி, பிசாசு, சத்துருக்களினின்று விடுவிக்கப்படுவார்கள்.

வாரத்தில் ஒரு நாள் சபைகூடி தேவனை ஆராதிக்க அவர் உண்டு பண்ணி வைத்திருக்கிறார். இது கர்த்தர் உண்டு பண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம் (சங் 118/24). ஆராதனை நாளுக்கு முந்தின நாளே தேவ ஜனத்துக்கு எது தேவையோ அதைக் கூட்டித் தருவார். ஞாயிற்றுகிழமையை ஒரு பண்டிகை நாளாக எண்ண வேண்டும். கர்த்தரில் களிகூர்ந்து மகிழ வேண்டும்.

ஆராதனையில் தேவன் நமக்கு விருந்தைத் தருகிறார் (நீதி 9/1-5). கொழுப்பான பதார்த்தத்தை நமக்குக் கொடுக்கிறார். தேவன் நமக்கு ஞானத்தைப் போதிக்கிறார், அறிவைத் தருகிறார். அவரை ஆராதிக்கும் ஜனத்தின் நாட்களை அவர் கூட்டித் தருகிறார்; பிரயோஜனமுள்ள வாழ்வைத் தருகிறார். நல்ல கனி கொடுக்கும் பாக்கியம் கொடுப்பார்; அவரை ஆராதிக்கும் ஜனத்தைப் பாவத்திற்கு விலக்குவார் (நீதி 1/18). அவரை ஆராதிப்பவர்களை யாக்கோபின் சுதந்தரத்தால் போஷிப்பார் (ஏசா 58/13,14). சந்தோஷத்தைக் கொடுப்பார். ஓய்வு நாளில் அவருக்கு இஷ்டமானதை நீ செய்யும் போது, அவர் பிரியம் உன் மேல் வரும்.

ஆண்டவர் உனக்கு ஆறுதல், சந்தோஷம், உற்சாகம் தருவார். ஓய்வு நாளில் சொந்தப் பேச்சைப் பேசாமல் அதிகமாய் வசனங்களைத் தியானிக்க வேண்டும். ஓய்வுநாளை மகிழ்ச்சியுள்ள நாளாக, மகிமையான நாளாக, பரிசுத்தமான நாளாக, ஆசீர்வாதமான நாளாக எண்ண வேண்டும்.

## ஜெபங்கள்

**1. இவைகளை மாற்றும் கர்த்தாவே!**

1. பயப்படும் காரியங்களை மாற்றும் கர்த்தாவே! - ஏசாயா 41/10
2. அநியாயத்தில் சந்தோஷப்படும் காரியங்களை மாற்றும்- Iகொரி 13/6
3. கிருபையில்லா காரியங்களை மாற்றும் - சங் 26/3
4. கலக்கமான காரியங்களை மாற்றும் - யோ 14/27
5. விடுதலையில்லா காரியங்களை மாற்றும் - யாத் 6/7
6. பொய் சொல்லப்பட்ட காரியங்களை மாற்றும் - லேவி 19/11
7. தேவனை சந்திக்க ஆயத்தமில்லா காரியங்களை மாற்றும் - ஆமோஸ் 4/12
8. தேவனை அறிகிற அறிவில் வாஞ்சையில்லாமை மாற்றும்-ஓசியா6/6
9. ஆத்துமாக்களை ஆதாயப் படுத்த முடியாத காரியங்களை மாற்றும் - ஏசாயா 60/22
10. நிந்திக்கப்படுகின்ற காரியங்களை மாற்றும் - ஆதி 30/23
11. மனுஷன் தேவனைவிட பெரிதாய் மதிக்கப்படும் காரியங்களை மாற்றும் - ஏசாயா 12/6
12. எருசலேமுக்கு ஆதரவு இல்லாத காரியங்களை மாற்றும் - ஏசா 31/5
13. கர்த்தரின் இரக்கங்கள் கிடைக்காத காரியங்களை மாற்றும் - புலம்பல் 3/22
14. கர்த்தரின் வாக்குத்தத்தங்கள் தாமதிக்கிற காரியங்களை மாற்றும் - எண் 23/19

**2. இக்காரியங்களில் விடுதலை தாரும், கர்த்தாவே!**

1. பயப்படுகிற காரியங்களில் விடுதலை தாரும் - ஏசாயா 41/10
2. நிந்திக்கப்படும் காரியங்களில் விடுதலை தாரும் கர்த்தாவே! - ஆதி 30/23
3. பொய்யாய் அவப்பழிப்போடப்படுகின்ற காரியங்களில் விடுதலை தாரும் கர்த்தாவே! - லேவி 19/11
4. விடுதலையில்லாத காரியங்களில் விடுதலை தாரும் - யாத் 6/7
5. துதிக்கமுடியாத காரியங்களில் விடுதலை தாரும் - ஏசாயா 12/4
6. சபிக்கப்பட்ட காரியங்களில் விடுதலை தாரும் - நீதி 10/6

7. மனிதர் அடிமைப்படுத்தும் காரியங்களில் விடுதலை தாரும் - ஏசாயா 12/6

8. ஆதரவில்லாத காரியங்களில் விடுதலை தாரும் - ஏசாயா 31/5

9. ஆத்துமாக்கள் ஆதாயம் பண்ண முடியாத காரியங்களில் விடுதலை தாரும் - ஏசாயா 60/22

10. கலங்குகின்ற காரியங்களில் விடுதலை தாரும் - யோ 14/27

**3. கிராம சுவிசேஷ ஊழியத்திற்காக ஜெபம்:**

1. கர்த்தாவே! இருப்பு கதவுகள் திறப்பதாக - அப் 12/10
2. வெண்கல கதவுகள் திறப்பதாக - ஏசாயா 45/4
3. இருப்புத் தாழ்பாழ்கள் திறப்பதாக - ஏசாயா 45/4
4. சுவிசேஷ வாசல்கள் திறப்பதாக - I கொரி 16/9
5. தாவீதின் திறவுகோலால் திறந்திடும் - வெளி 3/7
6. ஒருவரும் பூட்டக் கூடாதபடி திறந்திடும் - வெளி 3/7
7. இப்பகுதிகளில் தேவ அக்கினி இறங்குவதாக - லூக்கா 12/49
8. பின்மாரி மழை பொழிவதாக - சகரி 10/1
9. மனந்திரும்புதலை அனுப்பும் - அப் 2/38
10. விக்கிரக ஆவிகளைக் கட்டிப்போடும் - ஏசாயா 2/18
11. வசனங்களை விதைத்திடும் - மத் 13/3
12. துன்மார்க்கரின் கிரியைகளைக் கட்டிப்போடும் - சங் 1/5,6
13. ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்களைக் கட்டிப்போடும் - மத் 7/15
14. ஓநாய்கள் பீறாதபடி காத்திடும் - மத் 7/15
15. முன்னணியில் செல்லும் - மீகா 2/13
16. முன் செல்லும் - ஏசாயா 45/2
17. கோணல்கள் நேராவதாக - ஏசா 45/2
18. தடைகள் உடைவதாக - மீகா 2/13
19. பள்ளங்கள் நிரம்புவதாக - ஏசாயா 40/4
20. வெள்ளங்கள் அடங்குவதாக - ஏசாயா 93/3,4
21. கரடுமுரடானவைகள் சமமாவதாக - ஏசாயா 40/4
22. பர்வதங்கள் உருகுவதாக - சங் 97/5
23. குன்றுகள் பொடியாவதாக - ஏசாயா 41/15
24. செங்கடல்கள் பிளப்பதாக - ஏசாயா
25. எரிகோக்கள் உடைவதாக - யோசுவா 6
26. ஆவியானவர் அசைவாடுவாராக - ஆதி 1/2

27. வரங்கள் செயல்படுவதாக - 1 கொ 14/1

28. தூதர் உதவிகளை அனுப்பும் - எபி 1/14

பலவானை முந்திக் கட்டினால் ஒழிய பலவான் வீட்டுக்குள் புகுந்து அவன் உடமைகளைக் கொள்ளையிட முடியாது.

சுவிசேஷ ஊழியங்களைத் தடை செய்யும் இந்த பலவானின் ஆவிகளை ஆவியானவர் கட்டிப் போடுவாராக. அவன் கொள்ளையடித்து வைத்துள்ள ஆத்துமாக்கள் விடுவிக்கப் படுவார்களாக. அவர்கள் மனக்கண்களைக் குருடாக்கி வைத்துள்ள சாத்தானின் வல்லமைகள் அழிவதாக; கண்கள் திறப்பதாக; காதுகள் திறப்பதாக; இருதயம் திறப்பதாக; வசனங்கள் உட்செல்வதாக; மனந்திரும்புவார்களாக; ஞானஸ்நானம் பெறுவார்களாக; இரட்சிக்கப்படுவார்களாக (மத் 3/2) ஆமென்.

### 296. உலகத்தில் எது பெரியது?

உலகில் பெரியது ஆண்டவரின் இரக்கம். அவர் இரக்கமும், கிருபையும் பெரியது (சங் 10/84). தேவகிருபையைப் பெரிதாக எண்ணுங்கள். இந்த நாட்களில் பணம் அதிகமாக இருப்பவர்கள் பணத்தைப் பெரிதாக எண்ணுகிறார்கள். மக்கள் தங்களுக்கு ஆதரவாக இருந்தால், தங்கள் ஊர் ஜனங்கள் தங்களை காப்பாற்றுவார்கள் என எண்ணி விடுகிறார்கள். சபையின் ஊழியக்காரர் தங்களை காப்பாற்றுவார் என ஊழியக்காரர்களைப் பெரிதாக எண்ணி விடுகிறார்கள். சிலர் படிப்பையும், வேலையையும் பெரிதாக எண்ணுகிறார்கள். சிலர் அறிவைப் பெரிதாக எண்ணுகிறார்கள். சில அதிகமாகப் படித்தவர்கள் தங்களை மிஞ்சினவன் ஒருவனும் இல்லை என எண்ணி தேவனையே மதிப்பதும் இல்லை, அவர் கிருபையை நினைப்பதும் இல்லை. உலகத்தில் அவர் கிருபையே பெரியது. அதை அண்டிக் கொள்ளுங்கள்.

### 297. கிருபை என்றால் என்ன?

ஒரு தாய்க்கு பிள்ளையிடம் அன்பு இருக்கிறது, பிள்ளைக்கும் தாயிடம் அன்பு இருக்கிறது. மனிதனுக்கு மனிதன் மேல் அன்பு இருக்கிறது. மனிதனுக்கு கடவுள் மேலும் அன்பு இருக்கிறது. கடவுளுக்கு மனுஷன் மேல் இருக்கும் அன்பு தான் கிருபை. இதற்கு ஈடு இணையானது எதுவுமில்லை. கடவுளின் அன்பு எல்லா அன்பிற்கும் மேலானது. இது தான் கிருபை. இந்த அன்பு எப்படி வெளிப்படுகிறது என்பதை நாம் விளக்கிச் சொல்ல முடியாது. அவ்வளவு பெரிய அன்பு

தேவனின் அன்பு. நம் அறிவுக்கு எட்டாத அன்பு அவர் அன்பு; அது அற்புதமான அன்பு; விஞ்ஞானத்திற்கும் மேலான அன்பு; புத்திக்கு எட்டாத அன்பு; விளக்க முடியா அன்பு; நம் தகுதிக்கும் மேலான அன்பு.

**298. கிருபையின் வகைகள் எவைகள்?**

1. பாவங்களை மன்னிக்கிற கிருபை (மாற்கு 2/10)
2. பரலோக பாக்கியம் தரும் கிருபை (1 யோ 2/25)
3. நம்மோடிருக்கும் கிருபை (மத் 1/23)
4. தீமைகளுக்கு தப்புவிக்கும் கிருபை (யோ 10/10)
5. தீவினைகளுக்கு தப்புவிக்கும் கிருபை (யோ 10/10)
6. தீயவர்களுக்கு தப்புவிக்கும் கிருபை (யோ 10/10)
7. தகுதிக்கு மிஞ்சி நன்மை செய்யும் கிருபை (மத் 20/15)
8. மனிதனால் கூடாதவைகளை கைக்கூடி வரச்செய்யும் கிருபை (லூக் 1/37)
9. அதிசயமான கிருபை (சங் 17/7)
10. புத்திக்கு எட்டாத கிருபை (எரே 33/3)
11. ஆராய்ந்து முடியா கிருபை (எரே 33/3)
12. விஞ்ஞானத்திற்கும் மேலான கிருபை (எரே 33/3)
13. நிச்சயமான கிருபை (ஏசாயா 55/3)
14. நித்திய கிருபை (ஏசாயா 54/8)
15. உடன்படிக்கையின் கிருபை (ஏசாயா 54/10)
16. தாவீதுக்கருளிய கிருபை (ஏசாயா 55/3)
17. பரிபூரண கிருபை (அப் 4/33)
18. கர்த்தரின் கண்களில் கிருபை (ஆதி 6/8)
19. வரமாகிய கிருபை (ரோமர் 6/23)

**299. கிருபை யாருக்குரியது?**

கிருபை என்பது தேவனின் ஒரு குணாதிசயம். இது வேறு எவருக்கும் கிடையாது. இந்த கிருபைக்கு சமமாக வேறு எதையும் சொல்லவும் முடியாது; ஒப்பிடவும் முடியாது. மனிதனிடம் கேட்கும் போது, தயவு செய்து இந்த காரியத்தை செய்யுங்கள் என

**300. கிருபையை யாரிடமிருந்து பெற்று கொள்ள வேண்டும்?**

கிருபை தேவனுக்குரியது. ஆகவே தேவன் தான் இந்த கிருபையை மனிதன் மேல் பொழிய முடியுமே தவிர யாரும் பொழிய முடியாது. ஊழியக்காரன் நினைத்து ஜனங்களுக்கு கிருபையை கொடுக்க முடியாது.

கிருபையும் சத்தியமும் இயேசு மூலம் உண்டாயிற்று என யோவான் 1/17 கூறுகிறது. கிருபையும், சத்தியமும் எந்த மனிதன் மூலமாகவோ, மரித்த பரிசுத்தவான்கள் மூலமாகவோ, உயிருள்ள பரிசுத்தவான்கள் மூலமாகவோ பெற்றுக் கொள்ள முடியாது. கிருபையை இயேசு மூலமாக மட்டுமே நாம் பெற்றுக் கொள்ள முடியும். இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவராலேயன்றி ஒருவனும் பிதாவிடம் சேர முடியாது.

**301. கிருபை எவ்வளவு பெரியது?**

உமது கிருபை வானங்களுக்கு மேலாக எட்டுகிறது என சங்108/4 கூறுகிறது. அந்த கிருபைக்கு உயரம் இல்லை; அளவும் இல்லை. வானம் எவ்வளவு உயரம் என சொல்லவே முடியாது. அது போல அவர் கிருபையும் அவ்வளவு பெரியது என்பதை நம்ப வேண்டும். அவர் எவ்வளவு நல்லவர், வல்லவர் என்பதை நம்புங்கள். அவர் கிருபை எவ்வளவு பெரியது என்பதை நம்புங்கள்.

**302. கிருபை பெற என்ன செய்ய வேண்டும்?**

அவர் கிருபை என்றுமுள்ளது. எப்பொழுதெல்லாம் கிருபைக்கு காத்திருக்கிறீர்களோ அப்பொழுதெல்லாம் கிருபை கிடைக்கும். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுபெலன் அடைந்து கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து உயர எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

சிலர் 1 நிமிடம் ஜெபிக்கிறார்கள். சிலர் 1 மணி நேரம் ஜெபிக்கிறார்கள். சிலர் 7 மணி நேரம் ஜெபிக்கிறார்கள். இன்னும் சிலர் நாள் முழுவதும் ஜெபிக்கிறார்கள். சிலர் ஜெபிப்பதும் இல்லை; காத்திருப்பதும் இல்லை. ஆனால் அவர்களுக்கு கிருபை வேண்டும் என எண்ணுகிறார்கள்.

எவ்வளவுக்கெவ்வளவு காத்திருக்கிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு கிருபை கிடைக்கும். கொஞ்சம் விதைக்கிறவன் கொஞ்சம் அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். கொஞ்சம் காத்திருப்பவன் கொஞ்சம் கிருபை பெறுவான். அதிகமாக காத்திருப்பவன் அதிகமாக கிருபை பெறுவான். காத்திருக்காதவன்

கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியாது. கர்த்தர் நல்லவர் என்பதை ஏற்றுக் கொள்ளாதவன் எப்படி கிருபையை பெற்றுக்கொள்ள முடியும்?

என் இயேசப்பா நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என அறிக்கையிடுங்கள். தமது கிருபைக்குக் காத்திருப்பவர்களுக்கு நிச்சயம் கிருபை செய்வார், இரக்கம் செய்வார், அவர்கள் வெட்கப்பட்டுப் போவதில்லை. அவர் கிருபை வானங்களுக்கு மேலாக எட்டுகிறது. அவ்வளவு கிருபைகளை நம் மேல் தேவன் பொழிய முடியும் என்பதை விசுவாசித்து கிருபையை பெற்று, அதில் வளர வேண்டும். நாம் நிர்மூலமாகாதிருப்பது கர்த்தருடைய கிருபையே.

நிர்மூலமாகாமல் இருக்கும்படி கிருபை பெற வேண்டும். ஒழுங்காக ஆலயத்திற்கு வந்து எல்லா ஜெபங்களிலும் பங்கு பெற்றால் கிருபையைப் பெற்றுக் கொள்ள முடியும். விழித்திருந்து ஜெபியுங்கள். ஆலயத்திற்கு வந்தால் மட்டும் போதாது; செவிகொடுக்கச் சேருபவனே பாக்கியவான் (பிரசங்கி 5/1). ஆண்டவர் வார்த்தைக்கு செவிகொடுக்கும் போது கிருபையைப் பெற்று கொள்ள முடியும் (ஏசாயா 55/3).

ஜெபிக்க ஜெபிக்க கிருபை பெருகும். வசனம் வாசிக்க வாசிக்க கிருபை பெருகும். தியானிக்க தியானிக்க கிருபை பெருகும். துதிக்க துதிக்க கிருபை பெருகும். கிருபை பெற இன்னும் கர்த்தருக்கடுத்த காரியங்களில் வளருங்கள். ஜீவனைப் பார்க்கிலும் கிருபை நல்லது.

**303. கிருபையின் விலை என்ன?**

1 கோடி சொத்தை விட உயிர் பெரியது. உயிரை விட கிருபை பெரியது. எல்லாவற்றையும் விட கிருபை பெரியது. இந்தக் கிருபையை பெற நாம் காத்திருக்க வேண்டும். ஆண்டவரின் கிருபைகளை பெற்றுக் கொள்ளுங்கள். அதை அண்டிக் கொள்ளுங்கள்.

**304. தானியேல் பெற்ற கிருபையின் நன்மை என்ன?**

அந்தந்த நாளுக்குரிய கிருபைகளை அந்தந்த நாள் கேட்டுப் பெற்று கொள்ள வேண்டும். ஏனென்றால் காலைதோறும் அவர் கிருபை புதியது. மூன்று நாளைக்கு ஒருநாள் மட்டும் சாப்பிடுவேன் என நினைக்க மாட்டீர்கள். தினமும் மூன்று வேளை சாப்பிடுகிறீர்கள். அதுபோல தினமும் 3 வேளை கிருபை கேட்க வேண்டும். அந்தி, சந்தி, மத்தியான வேளைகளில் தியானம் பண்ணி முறையிடுவேன் என சங் 55/17 சொல்கிறது.

தானியேல் தினமும் 3 வேளை ஜெபித்தான். அவன் இடைவிடாமல் ஆராதித்த தேவன் அவனைக் காப்பாற்றினார். சிங்கங்களுக்கு அவனைக் காப்பாற்றினார். ஆண்டவருடைய கிருபை

தானியேலுக்குக் கிடைத்தது. அந்த கிருபையினால் சிங்கங்கள் தானியேலை ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது. சிங்கம் பெரிதா? கிருபை பெரிதா? கிருபை பெரிதாக இருந்தபடியால்தான் சிங்கங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

கிருபை பெற விரும்புகிறவர்கள் கிருபைகளை இயேசு மூலம் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். வேறு எந்த மனுஷன் மூலமாக கிருபை கேட்பது முறையல்ல. அப்படி கேட்டால் கிருபை கிடைக்காது.

**305. மரியாள் கிருபை உடையவளா? கிருபை பெற்றவளா?**

லூக்கா 1/28ல் 'கிருபை பெற்றவளே' என தேவதூதன் மரியாளை வாழ்த்தினான். மரியாள் கிருபை உடையவளல்ல; அவள் கிருபை பெற்றவள். கிருபையை நீ பெற்றபடியால் நீ வாழ்க என தேவதூதன் வாழ்த்தினான்.

**306. பூரண கிருபை என்றால் என்ன?**

அப்போஸ்தலர் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. வேதத்திலே அநேகர் கிருபை பெற்றவர்கள் என வாசிக்கிறோம், நோவாவுக்கு கர்த்தரின் கண்களிலே கிருபை கிடைத்ததாகப் பார்க்கிறோம், நோவாவுக்கு கிருபை கிடைத்தபடியால் அவன் வீட்டாருக்கும் கிருபை கிடைத்தது. கிருபை பெற்றபடியால் பெரிய வெள்ளத்திலும் தப்பிக் கொண்டார்கள்.

தாவீதுக்கு கிருபை கிடைத்தது. கிருபை பெற்றபடியால் அவனுக்கு விரோதமாக வந்த எல்லா யுத்தங்களிலும் ஜெயம் பெற்றான். தாவீதின் குமாரன் சாலமோனுக்கும் கிருபை கிடைத்தது. அப். பவுடம் கர்த்தர் சொன்னார், "என் கிருபை உனக்குப் போதும்" என்று, அவனுக்குக் கிருபையை வரமாக கொடுத்தபடியால் எல்லா தீமைகளினின்றும் விடுவிக்கப்பட்டான். II கொரி 11/20-ல் அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய் காவலி இருந்தவன், மரண அவதியில் இருந்தவன். யூதர்களால் 3 முறை அநேக அடிகள் பட்டவன். இவ்வளவு அடிகள் பட்டும் அவன் மரிக்கவில்லை. ஒருமுறை அவன் கல்லெறியபட்டபடியால் மரித்து போனான் என சீஷர்கள் நினைத்தார்கள். ஆண்டவரின் கிருபை இருந்தபடியால் அவன் மரிக்க வில்லை. என்ன தீமைகள் வந்தாலும் தேவகிருபை இருந்தால் அது நம்மை மேற்கொள்ளாது. நாம் சேதப்படுவது இல்லை. ஆறுகளால், கள்ளர்களால், சுய ஜனங்களால், அந்நிய ஜனங்களால் பலவிதமான தீமைகள் பவுலுக்கு வந்தது. எதுவும் அவனை மேற்கொள்ளவில்லை.

**307. மரியாள் கிருபை பெற்றதால் என்ன நன்மை?**

கன்னி மரியாள் கிருபை பெற்றவளாய் இருந்தாள்.

லூக்கா 2/28ல் உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என வாசிக்கிறோம். இது இயேசுவின் மரணத்தைப் பற்றி தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்ட ஒரு வார்த்தையாகும். பூலோகத்திலே இயேசுவுக்கு அவள் தாயாக இருந்தாள். அவர் ஊழியத்திற்கு வரும் வரை அவரை வளர்த்தாள். தன் மகன் மீது அவளுக்கு அன்பு இருந்தது. அவரைச் சிலுவையில் அறையும்போது மரியாளும் பக்கத்தில் தான் நின்று கொண்டிருந்தாள். அவள் ஆத்துமாவை ஒரு பட்டயம் குத்தியது போல அவளுக்கு வேதனை வந்தது. ஆனால் இவ்வளவு வேதனைகளையும் சகிக்கக் கூடிய கிருபையை மரியாள் தேவனிடமிருந்து பெற்றாள். கிருபை இல்லாதிருந்தால் மரியாளும் அந்த இடத்திலே மரித்திருப்பாள். இயேசுவுக்கு ஒவ்வொரு ஆணியும் அறையபடும் போதும் அவளுக்கு எவ்வளவு வேதனை இருந்திருக்கும். ஆனாலும் அந்த தீமைகள் அவளை சேதப்படுத்தவில்லை.

மரியாளும் பரிசுத்த ஆவிக்காக காத்திருந்த 120 பேர்களில் ஒருத்தியாக இருந்தாள். மரியாள் சீஷர்களோடு ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலும் தரித்திருந்தாள். மரியாள் விசுவாசத்தில் உறுதியாய் இருந்தாள். பரிசுத்த ஆவியை பெறுவதற்காகக் காத்திருந்தாள். மரியாள் கிருபையும் பெற்றாள் ; பரிசுத்தாவியும் பெற்றாள், அதுபோல நாமும் கிருபையும் பெற வேண்டும் ; பரி. ஆவியும் பெற வேண்டும், கிருபையையும், பரி. ஆவியையும் இயேசு மூலமே மரியாள் பெற்றாள். (அப் 1/14) (அப் 2/4)

**308. எவைகளை எல்லாம் பெற வேண்டும்?**

அப் 9/17ல் பவுல் அனனியா என்னும் ஊழியக்காரனிடம் சென்று ஞானஸ்நானம் பெற்று கொண்டான் என பார்க்கிறோம், அனனியா கைகளை வைத்து ஜெபித்தபோது பரி. ஆவியினால் பவுல் நிரப்பப்பட்டான்.

I கொரி 14/1 ல் ஆவியின் வரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என வாசிக்கிறோம்.

1. கிருபை பெற வேண்டும் (யோ 1/6)
2. பரி. ஆவி பெற வேண்டும் (யோ 3/5)
3. பரி. ஆவியின் வரங்களைப் பெற வேண்டும். (1கொ 14/1)

இந்த மூன்றையும் இயேசு மூலமாக மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும். வேறு எவராலும் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே இயேசு நாமத்தை அல்லாமல் வேறு எந்த நாமத்தைச் சொல்லி கேட்டாலும் இந்த மூன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது.

**309. மேன்மையான பலி செலுத்த வேண்டுமா?**

ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்த பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேன்மையானவருக்கு மேன்மையான பலி செலுத்த வேண்டும். இதற்கு நாம் ஒப்புக் கொடுக்க வேண்டும் ; பிரயாசப்பட வேண்டும் ; நேரம் செலவழிக்க வேண்டும். நம் ஞானம், அறிவு, திறமைகளையெல்லாம் ஆண்டவரை உயர்த்தும்படி செலவழிக்க வேண்டும், தாலந்துகளைப் புதைக்கக் கூடாது. கருத்தோடு தேவனை ஆராதிப்பவர்கள் ஆவியோடு அவரை ஆராதிக்க வேண்டும்.

நாளுக்கு நாள் அன்பின் கிரியைகளிலே வளர வேண்டும். ஞான வரங்களை விரும்ப வேண்டும். உனக்கு நீ மகிமையைத் தேடாதே. பவுல் அற்புதம் செய்தபோது ஜனங்கள் அவனுக்கு பலி செலுத்த வந்தார்கள். பவுல் அதற்கு இடம் கொடுக்கவில்லை. எந்த தூதனையும் பணியக்கூடாது. இயேசுவே தொழுகைக்குப் பாத்திரர் ; மகிமைக்குப் பாத்திரர் ; கனத்திற்குப் பாத்திரர். அவரையே வணங்க வேண்டும்.

**310. ஏன் அபிஷேகம் பெற வேண்டும்?**

**1.** அந்நிய பாஷையில் ஜெபிப்பவன் தேவனிடம் இரகசியம் பேசுகிறான். (1கொரி 14/2)

**2.** பக்தி விருத்தி உண்டாகிறது. (1கொரி 14/4)

**3.** தேவ சித்தப்படி ஜெபிக்க முடிகிறது. (ரோமர் 8/27)

**4.** அபிஷேகம் பெறும்போது தான் மற்ற ஆவியின் வரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (1 கொரி 14/1)

## தற்பரிசோதனைக் கேள்விகள்

**376.** கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடுகிறாயா? அல்லது உனக்குரியவைகளையே தேடுகிறாயா? பிலி 2/21

**377.** பிறருடைய குறைச்சலிலே அவர்களுக்கு உதவி செய்கிறாயா? பிலி 2/25

**378.** மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கிறாயா? அல்லது உன் முழு நம்பிக்கையும் இயேசுவாக இருக்கிறதா? பிலி 3/3

**379.** ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்கிறாயா? பிலி 3/3

**380.** எவைகளை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று இழந்திருக்கிறாய்? பிலி 3/7, 8

**381.** முன்னானவைகளை நாடி இலக்கை நோக்கித் தொடருகிறாயா? பிலி 3/13,14

382. இயேசு வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாயா? உன் எதிர்பார்ப்பு எதுவாக இருக்கிறது? பி□3/20

383. சுவிசேஷம் அறிவிக்க நீ பிரயாசப்படுகிறாயா? பி□4/3

384. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கிறாயா? பி □4 / 4

385. நீ எதற்காக கவலைப்படுகிறாய்? பி□4/6

386. உன் எல்லா விண்ணப்பங்களையும் ஸ்தோத்திரத்தோடே தேவனுக்குத் தெரியப்படுத்துகிறாயா? பில் 4/6

387. தேவசமாதானம் உன்னில் உண்டா? பி□4/7

388. நீ எவைகளை சிந்திக்கிறாய்? உன் சிந்தனைகள் தேவனுக்குப் பிரியமாக இருக்கிறதா? பி□4/8

389. எந்த நிலமையிலும் திருப்தியாக இருக்கிறாயா? பி□4/11

390. கர்த்தரின் பெலனைச் சார்ந்து கொள்கிறாயா? அல்லது உன் சொந்த பெலத்தால் போராடுகிறாயா? பி□4/13

391. கர்த்தருக்குப் பிரியமுண்டாக உன் வாழ்க்கை காணப்படுகிறதா? கொலோ 1/10

392. விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்கின்றாயா? கொலோ 1/22

393. கர்த்தர் நிமித்தம் பாடுகள் அநுபவிப்பதில் சந்தோஷமடைகிறாயா? கொலோ 1/24

394. உலகத்தின் வழிபாடுகளுக்கு நீ அடிமையாயிருக்கிறாயா? அல்லது அவைகளுக்கு மரித்திருக்கிறாயா? கொலோ 2/20

395. மனுஷருடைய கற்பனைகளின்படி நடக்கிறாயா? அல்லது தேவனுடைய கற்பனைகளின்படி நடக்கிறாயா? கொலோ 2/21

396. பூமியிலுள்ளவைகளைத் தேடுகிறாயா? அல்லது மேலானவைகளை நாடுகிறாயா? கொலோ 3/2

397. பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறாயா? கொலோ 3/10.

398. பிறருடைய குற்றங்களை மன்னிக்கிறாயா? கொலோ 3/13

399. தேவனிடமும் மனிதனிடமும் நன்றியுள்ளவனாய் இருக்கிறாயா? கொலோ 3/15

400. கர்த்தருக்கேற்றபடி உன் புருஷனுக்குக் கீழ்ப்படிகிறாயா? கொலோ 3/18

# புதியவெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. **WEBSITE ADDRESS IS www.hosannahchurch.in**
(இணையதள முகவரி : **www.hosannahchurch.in)**

3. **FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா - ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி - ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் - ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் - ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

---

**இலவச அறுவை சிகிச்சை** **பிறவி சம்பந்தக் குறைபாடுகளை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் இலவசமாக சரி செய்ய கொடைக்கானல் பாசம் மருத்துவமனையோடு தொடர் கொள்ளவும்.**

**& : 04542-240668**

---







**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி - 627 109, தமிழ்நாடு. & : (04637) 245273**
**WEB: www.hosannahchurch.in**